**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திருமதி.A.அன்னலெட்சுமி M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

2026 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06-ஆம் நாள், வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.118/2022**

(CNR No.TNTL-08-000145-2022)

1) செல்லவடிவு

2) விஜயலெட்சுமி

3) ஜெயராமன்

4) ஜெக செல்வன் ...வாதிகள்

/எதிர்/

ரவிச்சந்திரன் ....பிரதிவாதி

இவ்வழக்கானது 09.07.2026 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கல்யாணகுமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:18:34 +0530

## தீர்ப்புரை

வாதிகளால் இவ்வழக்கானது பிராது 2 வது தபசில் சொத்தின் ஒரு பகுதியான 3 வது தபசில் நடைபாதை வழியாக வாதிகள் பிராது 1 வது தபசில் சொத்திற்கு சென்று வருவதற்கு வசதிவழி உரிமை உண்டு என விளம்புகை பரிகாரம் கோரியும், அதற்கு அனுசரணையாக வாதிகள் 3 வது தபசில் நடைபாதை வழியாக 1 வது தபசில் சொத்திற்கு சென்று வருவதை இந்த பிரதிாதியோ, அவரது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது முகவரோ யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **வழக்குரையின் சுருக்கம்:**

பிராது 1 வது தபசில் விவரிக்கப்பட்ட அயன் நஞ்சை சர்வே எண்.1214 ல் ஏக்கர் 1, செண்டு 2 ல் தெற்கடைய செண்டு 48 நிலம் ஆதியில் 06.12.1952 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் செல்லநாடார் அவர்களின் குமாரர்களான குமாரசாமி நாடார், சோமசுந்தரம் நாடார், குட்டி நாடார் என்ற துரைபழம் நாடார் மற்றும் அன்னபாண்டியன் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது.

மேற்படி நான்கு நபர்களும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாய்மொழியாக பிரித்துகொண்டதில் 1 வது தபசில் சொத்து குமாரசாமி நாடார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. மேற்படி குமாரசாமி நாடார் 18.01.2012 ல் காலமாகிவிட்டார்.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:18:41 +0530

அவரது காலத்திற்கு பின் அவரது வாரிசுகளான இவ்வழக்கின் 1 முதல் 4 வாதிகள் மற்றும் செல்வ ஜெயசீலன், ஜெயகுமார் மற்றும் ராஜாராம் ஆகியோர்கள் 1ம் தபசில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள். பிராது 2ம் தபசில் சொத்தானது அன்னபாண்டியனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி அன்னபாண்டியன் 26.06.2003 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் 2வது தபசில் சொத்தை இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார். 2ம் தபசில் சொத்திற்கு பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது.

பிராது 1வது தபசில் சொத்தை கிரையம் பெற்ற நான்கு பேர்களும் பிரதான தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பிராது 1வது தபசில் சொத்திற்கு வருவதற்கு பிரது 2 வது தபசில் வழியாகதான் வந்து செல்வார்கள். இதை தவிர ஸ்தலத்தில் வேறு எந்த ஒரு இடத்திலும் பாதை கிடையாது. பிராது 1வது தபசில் சொத்தில் மேற்படி 4 பேர்களும் சேர்ந்து வாழை, நெல் பயிர்கள் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள்.

பிராது 2வது தபசில் சொத்தான புல எண்.1201/2 ஆக இருந்து அதன்பின்பு உட்பிரிவு செய்யப்பட்டு 1201/2A1, 1201/2B1 மற்றும் 1201/2A2 ஆக இருந்து வந்தது. மேற்படி சொத்தில் 1201/2A2 நிலம் தேசிய நெடுஞ்சாக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது. மீதம் உள்ள உட்பிரிவுகளின் 1201/2A1 மற்றும் 1201/2B1 நிலம் தான் பிராது 2 வது தபசில் சொத்தாகும். பிராது 2 வது தபசில் சொத்து இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. இவ்வழக்கில் 2 வது தபசில் சொத்தான புல எண். 1201/2A1 மற்றும் 1201/2B1 ல் 23 அடி அகலம் உள்ள ஒரு பாதை உள்ளது. அந்த பாதைதான் பிராது 3ம் தபசிலாக காட்டப்பட்டுள்ளது. பிராது 3வது தபசில்

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:18:47 +0530

சொத்தானது பிராது 2 வது தபசில் சொத்தின் ஒரு பகுதியாகும்.

வாதிகள் மற்றும் அவரது சகோதரர்களும் 1ம் தபசில் சொத்தில் விவசாயம் செய்வதற்காக 3 வது தபசில் சொத்தின் நடைபாதை வழியாகத்தான் டிராக்டர்களை விவசாயத்திற்கு கொண்டு சென்று வருகிறார்கள். இது தவிர 1வது தபசில் சொத்தில் நெல்பயிர் செய்யும் சமயம் நடுவை இயந்திரத்தையும் 3 வது தபசில் நடைபாதை வழியாகத்தான் கொண்டு வாதிகள் 50 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி புழங்கி வருகிறார்கள்.

பிராது 3ம் தபசில் சொத்திற்கு வடபக்கம் உள்ள புல எண்.1201/1 நிலம் ஆதியில் குமாரசாமி நாடார் தாயார் ராமலெட்சுமி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி ராமலெட்சுமி அம்மாள் காலமான பின்பு அவருடைய வாரிசுகளான குமாரசாமி நாடார், சோமசுந்தரம் நாடார், துரைபழம் (எ) குட்டி நாடார் மற்றும் அன்னபாண்டி நாடார் ஆகிய நான்கு பேர்களும் வாரிசுகள் நிலையில் மேற்படி புல எண்.1201/1 மற்றும் வேறு நிலங்களையும் அடைந்து அனுபவம் செய்து வந்தார்கள்.

தற்பொழுது மழை ஆகிவிட்டபடியால் கடந்த 02.10.2022 அன்று இந்த 3ம் வாதி தபசில் சொத்தில் பயிர் வைப்பதற்காக 3 வது தபசில் சொத்தின் வழியாக விவசாய பொருட்களை கொண்டு செல்லும் சமயம் இந்த பிரதிவாதி 3ம் தபசில் சொத்தின் வழியாக கொண்டு செல்லக்கூடாது என கூறி 3 வது வாதியை தடுக்க முயற்சி செய்து வருகிறார். மேலும், 3 வது வாதியை பிராது 3 வது தபசில் சொத்தின் வழியாக 1 வது தபசில் சொத்திற்கு செல்ல அனுமதிக்க மாட்டேன் என பிரதிவாதி பிரஸ்தாபம் செய்து வருகிறார். எனவே, 3 வது தபசில் சொத்தின் வழியாக வாதிகள்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:18:52 +0530

பிராது 1வது தபசில் சொத்திற்கு சென்று வருவதற்கு வசதிவழி உரிமை உண்டு என விளம்புகை பரிகாரம் கோரியும், வாதிகள் 3 வது தபசில் சொத்து வழியாக 1வது தபசில் சொத்திற்கு சென்று வருவதை இந்த பிரதிாதியோ,அவரது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது முகவரோ யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

வாதிகளின் வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா வழக்கு சொத்து ஏற்கனவே வாதியின் தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்களுக்கிடையே பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டது. தபசில் 1வது அயிட்ட சொத்திற்கு பாசனக்கால் வழியாக செல்ல வாதிக்கு வழி உள்ளது என்றும், 2 வது தபசில் சொத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலைக்கு செல்வதற்கு வழிபாதை எதுவும் இல்லை என்றும், வாதிகளும் அவர்களது முன்பாத்தியஸ்தர்களும் 2 ம் தபசில் சொத்தை வழிபாதையாக பயன்படுத்தியது இல்லை. பிரதிவாதி 2 வது தபசில் சொத்தை வாதியின் தகப்பனாரின் சகோதரர் அன்னபாண்டியன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று இந்நாள்வரை எந்த இடையூறுமின்றி ஆண்டு அனுபவித்து வருகிறார். 2 வது தபசில் சொத்தில் பாதை வழி இருப்பதாக வாதிகள் தரப்பில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிதான் 2 ம் தபசில் சொத்தின் உரிமையாளர். அ.வ.எண்.07/2004 ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர்

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:18:57 +0530

அறிக்கையில் பிரதிவாதிகள் இடத்தை சுற்றி கம்பி அமைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகள் தாவாவை தாக்கல் செய்ய வழக்கு மூலம் எதுவும் எழவில்லை. வாதிகள், பிரதிவாதியின் இடத்தில் எந்தவித பாதைவழி உரிமையும் கோர உரிமை இல்லை. வாதிகள் எந்தகாலத்திலும் 2 வது தபசில் சொத்தை பாதையாக பயன்படுத்தியது இல்லை. தாவா வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. தாவா வழக்கில் இழப்பீடு தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பாக வேண்டுகிறேன்.

3. வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கில் தீர்விற்காக 13.06.2023 தேதியில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. Whether plaintiff has 23 feet breadth and 187 feet length pathway rights in S.F.No.1201/2A1 and S.F.No.1201/2B1 ?
2. Whether the plaintiff is entitled for declaration of Easementry pathway right as prayed in suit ?
3. Whether the plaintiff has alternative pathway to reach the 1st schedule of suit property from North – South National highway ?
4. Whether the plaintiff is entitled for consequential permanent injunction as prayed in suit ?
5. Whether plaintiff has cause of action to file suit ?
6. Whether the suit is bad for non- joinder of necessary parties ?
7. Cost and any other reliefs ?

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:19:03 +0530

4. வாதிகள் தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.3 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.01 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.11 ஆவணங்கள் மற்றும் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எழுவினாக்கள் 1 முதல் 3 ற்கான தீர்வு :-**

5. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்திற்கு ஆதரவாக,

| ***S.No*** | ***Citation*** | ***Title*** |
|---|---|---|
| *1* | *2026 (3) CTC 517* | *T.M.Thiruvenkatasamy -Vs- M.Sundarrajan* |
| *2* | *2011(2) MWN (Civil) 472* | *Sekar -Vs-Sivakumaran* |
| *3* | *2011 (1) MWN (Civil) 796* | *Mahadhoon -Vs-R.Gunasekaran* |
| *4* | *2014(3)MWN (Civil)383* | *N.Thirumuppa Gowder -Vs- Ponnusamy and others* |
| *5* | *2009 (1) MLJ 67* | *Prabhakaran and others -Vs- Ranganathan and others* |
| *6* | *2009 (1) MLJ 502* | *C.Pazhamalai Pillaai (D) and others -Vs- Chinnadurai and Another* |
| *7* | *2015 (4) MLJ 28* | *Venkidusamy -Vs- Karupusamy* |
| *8* | *2017 (1) MWN Civil 30* | *N.Periyasamy -Vs- P.Arumugham* |
| *9* | *2019 (2) MWN (Civil) 336* | *Koolan @ Munusamy -Vs- Chennammal* |
| *10* | *2010(1) CTC 455* | *Sree Swayam Prakash Ashrammam and others -Vs-G.Annadvally Amma and others* |

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:19:09 +0530

பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்திற்கு ஆதரவாக,

| ***S.No*** | ***Citation*** | ***Title*** |
|---|---|---|
| *1* | *AIR 1932 Bombay 513* | *Marghabhai -Vs- Motibhai* |
| *2* | *AIR (33) 1946 Bombay 266* | Raychand Vanmalidas -Vs- Maneklal Mansukhbhai |
| *3* | *2008(1) CTC 137* | N.Boriah -Vs- The Nilgiri Co-opetative Printing Press, by its special officer, Charring Cross, Ootacamund |
| *4* | *2005 (2) MLJ 208* | Sarasu -Vs- Karuppa Gounder and others |
| *5* | *2009 (1) CTC 753* | Chellam Iyer and another -Vs- J. Ranganthan 3 others |
| *6* | *AIR 2006 Madras 139* | Ponnan alies Palaniappan And Anr -Vs- Chinna Gounder and others |
| *7* | *2010(1) LW 408* | Ramalingam -Vs- Thiruvenkadam |
| *8* | *2017 (3) LW 232* | Athappan (deceased) and others -Vs- Sengoda Gounder and others |
| *9* | *2015 (1) CTC 417* | K.Krishnamoorthy -Vs- Nagammal |
| *10* | *2017 (2) LW 132* | Aranthangi Co-operative Town Bank ltd,-Vs- Mohammed Beevi & another |
| *11* | *2004 (2) MLJ 362* | P.Funabalan and others -Vs- A.Subbiyan and another |
| *12* | *2004 (4) CTC 414* | Arunachalam Pillai and another -Vs- Sorimuthu Pillai |
| *13* | *1999(1) MLJ 606* | M.Venkammal -Vs- Rathina Udayar and another |
| *14* | *AIR 1976 Gujarat 180* | Purani Dhirajlal Amritlal -Vs- Mehta Sankleshwar Aditram and another |
| *15* | *2004 (1) MLJ 474* | Arunachalam Pillai and others -Vs- Sorimuthu Pillai |
| *16* | *AIR 2015 Sikkim 27* | Thakur Singh Chettri & others -Vs- Dharma Samsher Basnett & another |
| *17* | *2002 (3) M.L.J. 804* | Vedavalli Ammal -Vs- Kathayi Ammal |
| *18* | *2000 (1) MLJ 431* | Periyanna Gounder (died) and another -Vs- Komarasami |
| *19* | *AIR 2004 Madras 185* | Arunachalam Pillai and another -Vs- Sorimuthu Pillai |

போன்ற முன்தீர்ப்புகளை தாக்கல் செய்துள்ளார்கள்.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:19:14 +0530

6. தாவா வழக்கு வாதிகளால் தாவா 2ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியான 3 வது தபசில் நடைபாதை வழியாக 1வது தபசில் சொத்திற்கு சென்று வருவதற்கு வாதிகளுக்கு வசதிவழி உரிமை உண்டு என விளம்புகை பரிகாரம் மற்றும் பிரதிவாதிக்கு எதிராக தபசில் 3 வது நடைபாதை வழியாக வாதிகள் 1வது தபசில் சொத்திற்கு சென்று வருவதை தடைசெய்யா வண்ணம் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. தாவா 1வது இன சொத்தானது வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் செல்லநாடார் குமாரர்கள் வாதியின் தகப்பனார் குமாரசாமி, சோமசுந்தரம், குட்டி என்ற துரைபழம் மற்றும் அன்னபாண்டியன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு கூட்டு அனுபவத்தில் இருந்து அதன்பின்னர் மேற்படி 4 நபர்களுக்குமிடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் 1வது தபசில் சொத்தானது வாதியின் தகப்பனார் குமாரசாமி என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அவரது பெயரில் வா.சா.ஆ.3 பட்டா ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. மேற்படி குமாரசாமி என்பவர் 08.01.2012 அன்று காலமாகிவிட்டார் என்பதை வா.சா.ஆ.4 இறப்பு சான்றிதழ் மூலம் அறியமுடிகிறது. வாதிகளின் தகப்பனார் குமாரசாமிக்கு வாதிகளை தவிர ஜெயசீலன், ஜெயகுமார், ராஜாராம் ஆகியோர்கள் வாரிசுகள் என்பதை வா.சா.ஆ.5 வாரிசு சான்றிதழ் மூலம் அறியமுடிகிறது. மேற்படி 3 நபர்களும் தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பதை அறியமுடிகிறது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:19:19 +0530

8. தாவா 2 வது அயிட்ட சொத்தை வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் 12.02.1955 அன்று வாதியின் தகப்பனார் குமாரசாமி, சோமசுந்தரம், குட்டி என்ற துரைபழம் மற்றும் அன்னபாண்டியன் ஆகியோர்களுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டு அதன்பின்னர் அவர்களுக்கிடைய ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் மேற்படி தாவா 2 வது தபசில் சொத்தானது வாதியின் தகப்பனார் குமாரசாமியின் சகோதரர் அன்னபாண்டியன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகள் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். மேற்படி அன்னபாண்டியன் பி.வா.சா.ஆ.7 கிரைய ஆவணம் மூலம் 26.06.2003 அன்று பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி பிரதிவாதி பெயரில் பி.வா.சா.ஆ.8 பட்டா ஏற்பட்டு, தாவா 2 வது அயிட்ட சொத்தை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்பதும், 2 வது தபசில் பாதை இல்லை என்பதும் பிரதிவாதியின் கட்சி ஆகும்.

9. நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 ஆணையர் அறிக்கைக்கு வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆணையர் அறிக்கையில் 3-ம் தபசில் சொத்து இருப்பதற்கான அடையாளம் எதுவும் 2 ம் தபசில் சொத்தில் புலப்படவில்லை என்று ஆணையர் தெரிவித்துள்ளார். பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "*ஆணையர் அறிக்கையில் வடக்கு மற்றும் தெற்கு பக்கம் கம்பி வேலி அமைக்கப்பட்டு கம்பி வேலி இல்லாமல் கல்தூண் மட்டும் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்றும் 2003-ல் கம்பி வேலி என்னால் அமைக்கப்பட்டுவிட்டது*" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "*1ம்*

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:19:26 +0530

*தபசில் சொத்திற்கு வழக்கில் கண்ட 3ம் தபசில் பாதையை தவிர வேறு பாதை கிடையாது என்றால் சரியல்ல. பாதை உள்ளது* " என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆணையர் அறிக்கையில் பி.வா.சா.1 சாட்சிமளித்த 4 அடி அகலம் கொண்ட தண்ணீர் கால் சொல்லப்படவில்லை என்பதை அறியமுடிகிறது.

10. வாதிகளின் தகப்பனார் குமாரசாமி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.07/2004 பாகப்பிரிவினை மற்றும் தாவா பிரதிவாதியை 5ம் பிரதிவாதியாக குறிப்பிட்டு நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார் என்பதும், அந்த வழக்கில் தாவா சொத்துக்கள் உட்பட பிற சொத்துக்களும் காட்டப்பட்டுள்ளது என்பதை பி.வா.சா.ஆ.1 மூலம் அறியமுடிகிறது. அந்த வழக்கானது விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.5 மூலம் அறியமுடிகிறது. அ.வ.எண்.07/2004ல் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

11. 2ம் தபசில் சொத்தை அன்னபாண்டி என்பவர் தாவா வழக்கு பிரதிவாதிக்கு கடந்த 26.06.2003ல் ஏற்படுத்திய கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.7 உட்பட பிற பல சார்பதிவாளர் ஆவண எண்கள் ரத்து செய்து நடவடிக்கை எடுக்க 3-ம் வாதி திருநெல்வேலி மாவட்ட பதிவாளருக்கு மனு அளித்ததன் பெயரில் மேற்படி ஆவணங்களை ரத்து செய்ய

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:19:31 +0530

உகந்தது அல்ல என ஆணையிடப்பட்டுள்ளது என்பதை பி.வா.சா.ஆ.4 மூலம் அறிய முடிகிறது.

12. பி.வா.சா.ஆ.10 ஆவணம் வழக்கு சொத்திற்கு தொடர்பில்லாத ஆவணம் ஆகும். ஆனால் மேற்படி ஆவணத்தில் தபசில் விவரத்தில், மேற்கு - தண்ணீர் கால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. மேலும், வழக்குரையில் தபசில் சொத்துக்களுக்கு நான்கு எல்கைகள் குறிப்பிடப்படவில்லை என்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. பி.வா.சா.1 குறுக்கு விசாரணையின் மூலம் மேற்படி அ.வ.எண்.07/2004 வழக்கிற்கு எதிராக தாக்கல் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு A.S.89/2007 கடந்த 16.11.2009 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதையும், S.A.239/2010 கடந்த 07.04.2022 ல் பகுதியாக அனுமதிக்கப்பட்டு, ராமலெட்சுமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து தனியாக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டது என்பதையும் வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் அறிய முடிகிறது.

13. தாவா வழக்கு குமாரசாமி நாடாரின் வா.சா.ஆ.5 வாரிசு சான்றிதழில் கண்ட மற்ற வாரிசுதாரர்களுக்கும் சேர்த்து வாதிகள் வழக்கு தாக்கல் செய்ததாக கூறிவிட்டு வா.சா.1 குறுக்கு விசாரணையில், " மேற்படி செல்வ ஜெயசீலன், ஜெயக்குமார், ராஜாராம் 3 பேரை எதிர்த்துதான் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.384/2022 பாகப்பிரிவினை வழக்கு தாக்கல்

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:19:37 +0530

செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்'' என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.1 குறுக்கு விசாரணையில், '' மேற்படி அசல் வழக்கில் ''சி'' பரிகாரமாக இந்த வழக்கில் 2 மற்றும் 3 தபசில் கிரைய ஆவண எண்.1381/2003 பி.வா.சா.ஆ.7 ஆவணம் இல்லாநிலை செய்ய பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியாக ஞாபகமில்லை'' என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பிரதிவாதிகள் தான் உரிமையாளர் என்று உங்களுக்கு ஈடுபாடு இல்லை என்றால் சரிதான்'' என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், '' *குமாரசாமி நாடார் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இந்த வழக்கு சொத்து சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்*'' என சாட்சியம் அளித்துள்ளார்.

15. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், '' 1ம் தபசில் சொத்தை இந்த வழக்கில் இல்லாத மற்ற 3 சகோதரர்களுக்கும் பாகப்பிரிவினையில் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அவர்களுக்கும் உரிமையுள்ளது'' என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி அ.வ.எண்.384/2022 வழக்கு தொடர்பான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறியமுடிகிறது. மேலும் வா.சா.ஆ.7 ஆவணத்தின்படி 1ம் தபசில் சொத்து பொறுத்து

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:19:42 +0530

மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பால் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. தாவா சொத்து மேற்படி வழக்கில் 1வது அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

16. பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில், "சர்வே எண்.1201க்கு மேற்கு பக்கம் தான் 1ம் தபசில் சொத்தான சர்வே எண்.1214 உள்ளது என்றால் சரிதான், என்றும் வடபுறம் மற்றும் தெற்கு பக்கம் பற்றி தெரியாது" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. வழக்குரையில் பாகப்பிரிவினை குறித்து சொல்லப்பட்டுள்ளதே தவிர 4 நபர்களும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யும் சமயம் அவரவர் சொத்துக்களுக்கு செல்வதற்கு வசதியாக பாதை ஒதுக்கீடு செய்தார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. மேலும், எந்த சர்வே எண்ணில், எந்த அளவு ஒதுக்கீடு செய்தார்கள் என்றும் குறிப்பிடப்படவில்லை. மேலும், பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த அன்னபாண்டி மட்டுமே உயிருடன் இருக்கும் நிலையில் அவரை சாட்சியாக விசாரித்து மேற்படி விவரங்களை மெய்ப்பிக்க தவறிவிட்டனர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. மேலும், பிரதிவாதி கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்திலும் 1ம் தபசில் சொத்திற்கு செல்வதற்கு 3ம் தபசில் பாதை வழியாக மட்டுமே தேசிய நெடுஞ்சாலையை அடைய முடியும் என எந்த வாசகமும் குறிப்பிடவில்லை என்பதை அறியமுடிகிறது. மேலும், பி.வா.சா.1 தனது சாட்சியத்தில்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:19:48 +0530

"பாகப்பிரிவினை செய்யும்போது வழக்கு பட்டிகை 2ம் தபசில் சொத்தில் பாதை இருப்பதாக பாகப்பிரிவினை ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி 3ம் தபசில் பாதை இருந்திருந்தால் வாதிகளின் தகப்பனார், சித்தப்பா (அன்னபாண்டி) ஆகியோர் செய்து கொண்ட பாகப்பிரிவினையில் அதை தெரிவித்திருப்பார்கள் என்றும், வாதியின் சித்தப்பா அன்னபாண்டி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்திலும் வெளிப்பட்டிருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. குறிப்பாக வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தை அடிப்படையாக கொண்டுதான் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், " 3ம் தபசில் சொத்து பாதை சர்வே எண்.1201/2A1 யை தொடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 வரைபடம் தப்பு என்று தனது சான்றவணத்தை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. மேலும், 02.10.2023 முதல் வாதிகளை பிரதிவாதி அனுமதிக்கவில்லை என ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யும்போதும் அ.வ.எண்.7/2004ல் ஆணையர் அறிக்கையில் 2ம் தபசில் சொத்தை சுற்றி கல்வேலி உள்ளது என்று ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

20. மேலும் வா.சா.ஆ.3 பட்டாவின் உரிமை ஆவணமாக பாகப்பிரிவினை ஆவணமோ, கிரைய ஆவணமோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதை

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:19:53 +0530

அறியமுடிகிறது. மேலும், வா.சா.ஆ.3 பட்டாவானது வாதிகளின் தகப்பனாரின் பெயரில் உள்ளது என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.8 ஆவணம் 2ம் தபசில் சொத்திற்குரிய பட்டா என்பதை அறியமுடிகிறது. அது பிரதிவாதி பெயரில் உள்ளது.

21. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், " 1ம் தபசில் சொத்திற்கு வடக்கு பக்கம் காற்றாலையும், காற்றாலைக்கு செல்லும் பாதையும் காற்றாலை நிலத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான் என்றும், 3ம் தபசில் பாதை தவிர வேறு பாதை உள்ளது எனவும் சாட்சியம் அளித்துள்ளார். நீ.ம.சா.ஆ.1ல் வழக்கு 3ம் தபசில் பாதை இருப்பதாக குறிப்பிடப்படவில்லை. மேலும், தாவா 1ம் தபசில் சொத்தை அடைவதற்கு வேறு பாதைகள் இருப்பதாகவும் குறிப்பிடவில்லை. ஆகவே, நீ.ம.சா.ஆ.1 முழுமையான அறிக்கையாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. வழக்குரைப்படி சர்வே எண்.1201/2A1 மற்றும் சர்வே எண்.1201/2B1ல் (3ம் தபசில்) 23 அடி அகல மற்றும் 187 அடி நீள பாதை வழி உரிமை இருப்பதாக வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சி மற்றும் சான்றவாணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே எழுவினா -1 ற்கு தீர்வும் காண்கிறது.

23. வா.சா.2 குறுக்கு விசாரணையில்,

> " உங்கள் தாத்தா கணபதி நாடார் சொத்தின் அருகில் மின்சாரம் தயாரிக்கும் காற்றாடிகள் உள்ளது என்றால் சரிதான்.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:19:59 +0530

அவைகளை பராமரிக்க வாகனங்கள் எப்படி வரும் என்றால் அவர்கள் சொந்தமாக நிலம் வைத்துள்ளார்கள் அந்த நிலத்தின் வழியாக சென்று வருகிறார்கள். அந்த நிலம் பாதையாக உள்ளது என்றால் அது அவர்கள் சொந்த பாதை"

என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.3 தனது குறுக்கு விசாரணையில்,

" உங்கள் வயலுக்கு தெற்கே மின்சாரம் தயாரிக்கும் காற்றாலை உள்ளது என்றால் என் வயலுக்கு தெற்கே தள்ளி உள்ளது. மின்சாரம் தயாரிக்கும் காற்றாலைக்கு செல்லும் வாகனங்கள் உங்கள் வயல் வழியாக தெற்கு பக்கமாக போகும் என்றால் சரிதான். உங்கள் வயலுக்கு கிழக்கு தவிர மற்ற வடக்கே, தெற்கே, மேற்கே உள்ள வயல்களுக்கு கிழக்கு பக்கம் உள்ள தேசிய நெடுஞ்சாலைக்கு எப்படி செல்வார்கள் என்றால் குளத்து பக்கம் வழியாக தேசிய நெடுஞ்சாலைக்கு செல்வார்கள் என்றால் சரிதான்"

என்று சாட்சியம் அளித்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. மேலும் சர்வே எண்.1214/2 க்கு (1 ம் தபசில்) வடக்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் வாதியின் சகோதரர்கள் சொத்தும் நெல்லை சூர்யா சொத்தும் உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:20:04 +0530

24. மேற்கண்ட சாட்சியத்திலிருந்து, தாவா 3ம் அயிட்ட சொத்தை தவிர்த்து பிற சொத்துக்களும் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து தாவா 1ம் அயிட்ட சொத்தை அடைய இருக்கின்றன என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. ஆகவே, 3வது எழுவினாவிற்கு வாதிகளுக்கு மாற்றுபாதை 1வது இன சொத்திற்கு தேசிய நெடுஞ்சாலையிலிருந்து செல்வதற்கு இருக்கிறது என்று கருதி அவ்வாறே தீர்வும் காண்கிறது. ஆகவே, தாவா சொத்தை பொறுத்து வாதிகள் கோரிய வழி வசதியுரிமை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என கருதி அவ்வாறே எழுவினா-2 க்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**எழுவினா -4 :-**

25. எழுவினாக்கள் 1 முதல் 3ற்கான தீர்வு கண்டதற்கிணங்கவும், தாவா 1வது சொத்து வா.சா.ஆ.8 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின்படி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக உள்ள நிலையில் சொத்தின் உரிமையாளருக்கு எதிராக நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே தீர்வும் காண்கிறது.

**எழுவினா -5 மற்றும் 6:-**

26. எழுவினாக்கள் 1 முதல் 4ல் தீர்வு கண்டதற்கிணங்கவும், தாவா சொத்தின் வழக்குமூலம் வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:20:10 +0530

நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே தீர்வும் காண்கிறது. தாவா வழக்கு சொத்து 1 வது தபசில் வாதிகளின் தகப்பனார் பெயரில் பட்டா உள்ள நிலையில் வா.சா.ஆ.5 ல் உள்ள அவரின் அனைத்து வாரிசுகளும் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. தாவா வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

<u>எழுவினா-7</u>

27. இவ்வழக்கில் தரப்பினர்களுக்கிடையே எடுக்கப்பட்டுள்ள கட்சி மற்றும் மேலே தீர்மானிக்கப்பட்டுள்ள எழுவினாக்கள் 1 முதல் 6 னை கருத்தில்கொண்டு இவ்வழக்கின் தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது. மேலும், இந்த வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எழுவினா- 7 ற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:20:15 +0530

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06-ம் நாள் திறந்த வழக்கரங்கில் அவையறியப் பகரப்பட்டது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.08.06 15:20:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

**வாதிகள் தரப்பு சாட்சிகள்:**

1. வா.சா.1 - திரு. ஜெயராம்
2. வா.சா.2 - திரு. சுரேஷ்குமார்
3. வா.சா.3 - திரு. ஆஸ்டின்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| வ.எண். | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | மாதிரி வரைபடம் | - |
| வா.சா.ஆ.2 | 06.12.1952 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 30.07.2019 | 466 எண் கொண்ட பட்டா | கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.4 | - | குமாரசாமி நாடாரின் இறப்பு சான்றிதழ் | புகைப்பட நகல் |
| வா.சா.ஆ.5 | - | குமாரசாமி நாடாரின் வாரிசு சான்றிதழ் | புகைப்பட நகல் |
| வா.சா.ஆ.6 | 12.02.1955 | கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 07.04.2022 | மதுரை உயர் நீதிமன்றத்தின் S.A. (MD) No.239/2010 2 ம் மேல்முறையீட்டின் தீர்ப்பு | நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | 15.0.2017 | பட்டா எண்.2401 | கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.9 | | புகைப்படங்கள் (7 எண்ணம்) மற்றும் குறுந்தகடு | அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி:</u>**

1. பி.வா.சா.1. - திரு. ரவிச்சந்திரன்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| வ.எண். | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | | அ.வ.எண்.7/2004 ன் பிராது | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 16.10.2006 | அ.வ.எண்.7/2004 ன் தீர்ப்பாணை | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | | அ.வ.எண்.7/2004 ன் நீதிமன்ற ஆணையர் அறிக்கை | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 29.05.2023 | திருநெல்வேலி மாவட்ட பதிவளார் பிறப்பித்த உத்தரவு | அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 16.10.2006 | அ.வ.எண்.7/2004 ன் தீர்ப்புரை | நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.6 | - | புல எண்.1201 க்குரிய புல வரைபடம் | உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.7 | 26.06.2003 | கிரைய ஆவணம் | கணினி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.8 | - | புகைப்படம் மற்றும் குறுந்தகடு | அசல் |

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:20:34 +0530

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.9 | - | புல வரைபடம் | உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 19.12.2001 | கிரைய ஆவணம் | கணினி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.11 | 29.07.1964 | கிரைய ஆவணம் | கணினி பதிவிறக்க நகல், |

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

| வ.எண். | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| நீ.சா.ஆ.1 | - | நீதிமன்ற ஆணையர் அறிக்கை | அசல் |
| நீ.சா.ஆ.2 | - | நீதிமன்ற ஆணையர் வரைபடம் | அசல் |
| நீ.சா.ஆ.3 | - | சர்வேயர் வரைபடம் (எண்ணம் 2) | அசல் |

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.06 15:20:40 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

மு.மா.உ.நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.118/2022

வரைவு / நேரிய தீர்ப்புரை

நாள். 06.08.2026